கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி. ௧	சௌமிய௵ ஆவணி௴	பகுதி. ௫

விடாமுயற்சி.

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

முயற்சி, வினை, தொழில் என்பன ஒருபொருட் சொற்கள். இம்முயற்சியானது உலகத்திலுள்ள எல்லாருக்கும் இன்றியமையாதது. சகல காரியங்களையும் நடத்துவது. தினந்தோறும் புதிய புதிய தோற்றங்களையும் சுகதுக்கங்களையும் கொடுத்து நிற்பது. மானிடர்களில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், கற்றவர்கள், கல்லாதவர்கள், பலசாலிகள், பலவீனர்கள் முதல் எல்லாருக்கும் உரியதாகி அவரவர்களை உயர்த்துவது இதுவே. இது சரீரமுயற்சி, மனமுயற்சி யென இருவகைப்படும். படினும் மனமுயற்சியே மிகச் சிறந்ததாகும். சரீர முயற்சிக்கும் மனமுயற்சியின் துணை அவசியமாம். மனமுயற்சிக்கோ சரீரமுயற்சியின் துணை அவசியமில்லை. மனமுயற்சியினின்றுதான் சரீரமுயற்சி தோன்றுமென்று கூறினுமிழுக்காது. பூகபௌதிக ரசாயன நூல்கள், கணிதநூல்கள், வேதாந்த சித்தாந்த நூல்கள் முதலிய சகல சாஸ்திரங்களும் ஒவ்வொருவருடைய மனமுயற்சியின் பயனாகவே வந்தன வென்பதை யாராவது மறுக்க முடியுமா? முடியாது. யார் யார் எதை எதை அடையவேண்டுமாயினும் தக்க வகையால் விடாது முயறல் வேண்டும். விடாமுயற்சியுடையார்க்கு எதுவும் கைகூடும். என்னை? உயர்மரக்கொம்பிற்றேனைத் தானே சென்றடையவேண்டுமென ஒரு முடவன் விடாது முயன்றால் அது கைகூடுமாறெங்ஙனம்? இதனால் முயற்சியினாலேயே எதையும் அடையலாமென்ற லியையாதன்றே" எனின் அற்றன்று. தக்க

வகையால் விடாது முயறல் வேண்டும் என மேலேகூறியதைக்கவனித்தால் இத்தகைய ஆசங்கை நிகழாதென்க. முயற்சிக்குரிய தக்க வகையாவது யாது? எனிற் கூறுதும்.

> " கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
> மூல மறிந்து விளைவறிந்து—மேலுந்தாஞ்
> சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
> தாள்வினை யாளப் படும். "

என்ற நீதிநூலுடையார் கூற்றை நன்கு சிந்தித்தால் முயலும் வகையனைத்தும் எளிதிற் காணலாம்.

ஒரு காரியத்தினிமித்தம் முயலுமுன்னர் அதைச்செய்துமுடித்தற்குரிய காலத்தையும், செய்தற்கேற்ற இடத்தையும், அக்காரியத்திற்குக் காரணத்தையும்; செய்யுங்காலும் செய்தபின்னும் வரத்தக்க நன்மை தீமை விளைவுகளையும் ஆராய்ந்துகொண்டு, யோசிக்கற்பாலவனைத்தும் ஓர்ந்து, தனக்குத்துணையாக வருபவைகளையும் சிந்தித்துச் செய்யவேண்டும் என்பது மேற்கவியின் கருத்தாகும்.

> " பொருள்கருவி காலம் வினையிடனோ டைந்தும்
> இருடீர வெண்ணிச் செயல் "

என்ற தேவர் திருவாக்கும் இதுவேயாம்.

ஒன்றைச் செய்யப்புகுமுன்னரே இதைச்செய்தற்கு இப்பொழுது ஏற்ற காலமா என்பதை முதற்கண் ஆராயவேண்டும். ஆங்காலமாயின் உடனே செய்யத்தொடங்கலாம். அல்லாக்காலமாயின் ஆங்காலம் வருங்காறும் பொறுத்து அடங்கியிருந்து அது வந்தபின்னரே முயலவேண்டும். இதுபற்றியே

> " காலங் கருதி யிருப்பர் கலங்காது
> ஞாலங் கருது பவர். "

> " கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
> குத்தொக்க சீர்த்த விடத்து. "

என்றார் பெரியார். பகலிற் கூகையைக் காக்கை வெல்லும். இரவில் அக்காக்கையைக் கூகை வெல்லும்.

காலநலத்தைக் கருதுவதுபோலவே இடத்தைப்பற்றியுஞ் செவ்வையாக யோசித்தலவசியம். காரியசித்தி பெறுதற்குரிய இடத்

தைப்பற்றிக் கவனித்தலும் மிக அவசியமே "தன்னூர்க்கு யானை அயலூர்க்குப் பூனை" என்பது பழமொழியன்றோ? நீருள்ளிருக்கும் போது பெரிய யானையையும் இழுத்து வெல்லும் முதலையானது தன் னிடமாகிய நீரைவிட்டுக் கரையில் வந்துவிட்டால் ஒரு நரி கூட அம் முதலையை வென்றுவிடும். நீரிற் செல்லும் கப்பல் கரையிற் செல் லாது. கரையிற் செல்லும் வண்டி நீரிற்செல்லாது. கருடனைக் கண்டவுடன் பாம்புகள் அஞ்சி நடுநடுங்கிப் பதுங்குவனவாகும். சிவ பிரான் அணிந்திருக்கிற பாம்புகள் அங்குவந்த கருடனைக்கண்டு புன் னகை கொண்டு 'கருடா சுகமா' என்று வினவிற்றும். அதுகேட்ட கருடன் அப்பாம்புகளின் செயலை வியந்து 'யாருக்கும் இருக்கு மிடத்திலிருந்தால் சுகந்தான்' என்று விடை கொடுத்தவாம். இத னால் ஒவ்வொருவருடைய வலிமையும் எல்லா இடத்தினும் செல்லு மெனக் கருதாது, தங்கள் தங்கட்கு உரிய இடத்தினமைதியைக் கவ னித்தே முயல்வது அவசியமாம். நாம் செய்யும்காரியம் இதன் மூலமாக முடியுமென்று அதற்கு ஆதிநிலையை ஆராய்ந்து கொள்ளுத லுடன் அதைச் செய்யுங்கால் இடையில் சம்பவிக்கும் கஷ்டநஷ்டங் களையெல்லாம் தெரிந்து அவற்றிற்குத்தக்க பாதுகாப்போடு செய்த லுடன் அக்காரியம் நிறைவேறுதலால் உண்டாகும் பயன் இன்னது என்றும் தெரியவேண்டும். மிகப்பெரியகாரியத்தைச் செய்து அறச் சிறிய பலனையடையவேண்டிவரின் வியர்த்தமாம். "மலையைக்கிள்ளி எலியைக் கொள்ளல்" என்றபடி வீண்படாவாறு முன்னரே கருதிச் செய்துமுடித்தல் வேண்டும். இவ்வாறு ஆராயாமல் அவசரப்பட்டுப் பொறாமை கோப முதலியவற்றால் முதலில் ஒன்றைச்செய்து பின்பு மனங்கவல்வது அறிவற்ற செயலேயாம். ஒன்றைச்செய்யுமுன்னரே அதைப்பற்றி யோசிக்கவேண்டியவற்றை யெல்லாம் நிதானமாக யோசித்துத் தீர்மானித்துத்தான் தொடங்கவேண்டும். அங்ஙனம் ஆலோசியாது தொடங்கினால் இடையேவலியற்று இடர்ப்படுப்படநேரும்.

"உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
இடைக்கண் முறிந்தார் பலர்." என்பதும்

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு."

என்பதும் இக்கருத்தை வலியுறுத்துவனவாம்.

தாம் எவ்வளவு வலியராயினும் தம் துணைவர் வலியையும் அறிந்து செயல்வேண்டும். யாவராயினும் பிறருதவியின்றி ஜீவிக்க முடியாது. ஆதலின் நட்புக்கொண்டு உதவுவார்களின் கால நல முதலியவற்றையும் நாமே நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்பதாயிற்று.

இங்ஙனமே காலம் இடம் முதலிய அனைத்தையும் முன்னரே தெரிந்து தொடங்குவார்க்கு முடியாத காரியம் எதுவுமிராது. இதினாற்றான் "ஞாலங் கருதினுங் கைகூடும் காலங் கருதி யிடத்தாற் செயின்" என்றார் பெரியார்.

இங்கே கூறிய அனைத்துவகையானும் தெளிந்து தொடங்கிய போதும் அக்காரியம் நிறைவேறாது தவிர்தலுமுண்டு. ஒரு முறை தவறினால் அத்துடன் மனச்சலிப்புறாது பின்னும் பின்னும் அதுவே நினைவாகப் பன்னாள் முயறல்வேண்டும். அவ்வாறு விடாமுயற்சி செய்யின் அக்காரியம் கைகூடுமென்பது ஒரு தலையேயாம். உலகத்தில் பகீரதப்பிரயத்தனம் என்று வழங்கும் பழமொழியைப் பார்ப்போம். ஆகாய கங்கையைப் பூமிக்குக்கொண்டுவரக் கருதி ஒருவன் பன்னாள் முயன்று இறக்க, அவன் மகனும் அவ்வாறே பன்னாள் முயன்று இறக்க, அவன் மகனும் மனந்தளராது முயன்று ஆகாய கங்கையைப் பூமியிற்கொண்டுவந்து கருமத்தை நிறைவேற்றினான். இவனே பகீரதன் இதனாற்றான் பகீரதப்பிரயத்தனம் என்று விடாமுயற்சிக்கு இவனையே உலகத்தார் உதாரணங் கூறுவாராயினர்.

முயற்சியால் அடையத்தக்கதெதுமில்லை. எல்லாம் விதியின் படியே (ஊழின்படி) நடக்கும் என்று கூறுவார் பலர். விதியே வலிதென்றும், மதியேவலிதென்றும் பலர் சண்டையிடுவர்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்." என்பதையும்,
"தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்." என்பதையும்,

எடுத்துக்கூறித் தங்கள் தங்கள் கல்வியறிவிற்கேற்ப வாதித்து எதிரி வாயையடக்குவர்.

இந்த ஊழ் என்பது யாது என்று ஆராய்வாம்.

இருவினைப்பயன்செய்தவனையே சென்றடைதலாகிய நியதியே ஊழ் என்பர் பரிமேலழகர். இஃது எல்லா நூலாசிரியர்க்கும் ஒப்ப

முடிந்ததாம். ஆகவே விதி அல்லது ஊழ் என்பது நாம் முன்னர்ச் செய்த கர்மபலனே யன்றி வேறில்லை. ஆகவே அந்த ஊழுக்கும் ஆதியாய் நிற்பது நமது தொழிலே யென்று துணியப்படும். இங்ஙனமாக முயற்சிக்கு வேறாகாத விதியை வேறொருதனிப் பொருளாகக்கொண்டு வாதித்தல் செல்லாதென்க. அன்றியும் மார்க்கண்டேய முனிவர் தம்முயற்சி வலியால் விதியையும் வென்று என்றும் இறவாத பதவிபெற்றார் எனக்கூறலாலும், மனத்திட்பத்துடன் விடாது முயன்றால் விதியை வெல்லலாம் எனக்கருதி

"உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே சாலுங் கரி." எனவும்

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்." எனவும் முனிவருந்தேவரும்

பணித்தமையானும் முயற்சியானது அவசியம் வேண்டப்படுவதொன்றே யென்பது போதருதல் காண்க.

ஒவ்வொருவருக்கும் தம்முயற்சியால் வருபொருள் சிறிதேயாயினும் அதனாலடையும் மகிழ்ச்சிமிகப்பெரிதாதல் உலகானுபவமாம். "தந்தை தேடிவைத்த பட்டுமெத்தையிற் றுயில்வதினும் தான்றேடிய தாழம்பாயிற் றுயிறல் சிறந்தது" என்பது பழமொழியன்றோ?

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்"

"உத்யோகம் புருஷலக்ஷணம்" என்பன முதலாய எத்தனையோ முதுமொழிகளால் நம்மவர்கள் முயற்சியையே மிகப்பெரிதாகக் கருதியவர்களென்பதை யறியலாம். முயற்சியுடையார்க்கே செல்வப்பெருக்குளதாமென்பதும், அன்னவரே உபகாரியாவாரென்பதும், முயற்சியில்லாதார் உபகாரியாகாரென்பதும், அவர் உபகரிக்கத்தொடங்கினும் இடைக்கண் முரிந்து பட்டொழியுமென்பதும் பொய்யில்புலவர் கருத்தாதலை,

"தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு."
தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்."

என்னும் வேதமொழிகளேவலியுறுத்தாநிற்கும். இங்ஙனம்முயன்று ஈட்டும் பொருளெல்லாம்தக்கவர்கட்கு உபகரித்தற்கேஉரியனவாகக் கொள்ளவேண்டுமென்பார்,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு.
வேளாண்மை செய்தற் பொருட்டு" எனவும் கூறினர். இவற்றால் முயறற்சிறப்பும், முயன்றீட்டும் பொருட்சிறப்பும், அப்பொருளாற் பெறப்படும் பயனின்றன்மையும் இனிது விளங்குவனவாம்.

கண்டீரக் கோப்பெருநள்ளியைப் புகழத்தொடங்கிய வன்பரணர் என்னும் புலவர், "கறங்குமிசை யருவிய பிறங்குமலை நள்ளிநின் அசைவில் நோன்றாள் நசைவள னேத்தி......" என்றார். இதில் அசைவில் நோன்தாள் நசைவளன் ஏத்தி என்ற சொற்றொடர்களைக் கவனிப்பாம். தளர்ச்சியில்லாத வலிய முயற்சியானுய நச்சப்படும் செல்வத்தை வாழ்த்தி, என்ற பொருள் தோன்றும். இதனால் தளராது ஊக்கத்துடன் முயன்றால் செல்வமுளதாம் என்பதும், அச்செல்வம் ஊருணி நீர்போல யாவராலும் விரும்பிக்கொள்ளத் தக்கபடி பிறர்க்குபகரிக்கும் பெற்றிமைவாய்ந்திருத்தல் வேண்டுமென்பதும், அங்ஙனம் வாய்ந்தக்காற்றான் வாழ்த்தப்பெறுவதாமென்பதும் விளங்குதல் காண்க.

ஆங்கிலேயர் ஜப்பானியர் அமெரிக்கர் முதலிய எத்தனையோ நாட்டார்கள் முயற்சியின் பலத்தால் முன்னிலும் பன்மடங்கு மேம்பாடுற்று விளங்குவதை யாவரே யறியார்? இவர்கள் சிலகாலத்துக்கு முன்னர் இருந்த தாழ்ந்த நிலையையும் முயற்சிவலிமை பெருகப்பெருகத் தற்போது இவர்கள் அடைந்திருக்கும் மஹோந்நத நிலையையும் சரித்திரவாயிலாகப் படித்தறிந்தவர்கள் ஒரு நிமிஷங்கூட முயற்சியின்றி வீண்பொழுது போக்கச் சம்மதியாரென்பது துணிபு.

இத்தகையமுயற்சியென்னும் செழும்பயிர்க்குக் களையாகத்தோன்றுவது மடி அல்லது சோம்பலாம். மடிமை யென்பது குடிமையைக் கெடுத்து மிடிமையைக்கொடுத்து வாழ்நாளையுங் குறைத்துத் தேகநலத்தையும் தொலைப்பதாம். நம் நாட்டில் எத்தனையோ வாலிபர்கள் யாதொரு முயற்சியுமின்றிச் சோம்பேறிகளாக ஆண்டிவேட

மிட்டும் கல்லுளிமங்கராயும் பிச்சையேற்று வயிறுவளர்த்துக் காலங்கழித்துத் தமக்கும் பிறர்க்கும் கேடுபுரிவாராயிருக்கின்றனர்

பருத்துக்கொழுத்த தேகவலியுடையாராயும் யாதொரு தொழிலுஞ் செய்யாது பிச்சையேற்றுண்கின்றனர். பிச்சையேற்குங்காலமொழிய மற்றநேரமெல்லாம் சூதாட்டம், களியாட்டங்களிற் கழிக்கின்றனர். முயற்சியற்ற சோம்பேறிகள் முகத்தில் லக்ஷ்மீகரம் சற்றுமில்லை. முயற்சியாளர் முகத்திலோ எப்பொழுதும் பேரழகு பொலிந்து தோன்றும்.

“மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்” என்பதனானே மடிமை மூதேவிக்கு இருப்பிடமென்பதும், முயற்சி ஸ்ரீதேவிக்கு இருப்பிடமென்பதும் அறியலாம்.

ஆலத்தூர் கிழார் என்ற பண்டைப்புலவரொருவர் தாம்கூறிய ஓர் கவியில் “பூட்கையில்லோன் யாக்கை போலப்—பெரும்புல்லென்ற........” எனக்குறிப்பிட்டு முயற்சியில்லாதவன் உடம்புபொலிவிழந்து வாடியிருத்தலை விளக்கியுள்ளார். இஃதொன்றோ? அவிநய இலக்கணங்கூறும் பண்டை நூலாசிரியர் மடிமைக்குணத்திற்கு இலக்கணங் கூறுமிடத்தே சோம்பேறிகளின் தன்மையை நன்கு புலப்படுத்தியுள்ளார். அதுவருமாறு

“மடியின் அவிநயம் வகுக்குங் காலை
நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையும்
மூரி நிமிர்த்து முனிவொடு புணர்த்தலும்
காரணம் இன்றி ஆழ்ந்துமடிந் திருத்தலும்
பிணியு மின்றிச் சோர்ந்த செலவோடு
அணிதரு புலவர் ஆய்ந்தனர் என்ப”

(இது சிலப்பதிகார வுரையிற் கண்டது.)

விரல்களை நொடித்தலும், தூங்குமூஞ்சிகளாகிக் கொட்டாவியிடுதலும், எப்பொழுதும் மன எழுச்சியின்றிச் சோர்ச்சியுறுதலும் சோம்பேறிகளுக்கு இலக்கணமாகக் கூறியிருத்தல் மிகவும் வியக்கத்தக்கதொன்றே. இங்ஙனம் இழித்துக்கூறப்படும் சோம்பலாகிய களையை வேருடன் களைந்து ஊக்கமாகிய நீரை வார்த்து முயற்சியாகிய பயிரை வளர்த்தால் பொருளும் புகழுமுதலாகியபலன்களையடையலாம். தற்காலத்தில் நம் நாட்டார் அம்முயற்சியின் பெருமையை

நன்கு கவனிக்க வேண்டியவர்களாதலின் இதைப்பற்றி யிங்கே யிவ்வளவு எழுத நேர்ந்தது. அந்நியநாடு சிலவற்றில் சோம்பேறிகளான பிச்சைக்காரர்க்குப் பிச்சையிடக்கூடாதெனவும் அப்படி வருகிற பிச்சைக்காரர்கட்குச் சட்டப்படி தண்டனையுண்டெனவும் விதியேற்படுத்தி யிருக்கின்றனர். இது ஜனசமூகத்தார் கவனம் முயற்சியிற் செல்லச் செய்தற்கு ஏற்ற மார்க்கமென்றே தோன்றுகிறதல்லவா? முயற்சி செய்பத்தக்க சக்தியுடையார்யாரும் முயற்சிசெய்தே ஜீவிக்க வேண்டும். ஏழைகள் சோம்பேறிகளாகிப் பிச்சையேற்பதைக் கடிந்து பேசினோம். செல்வர்களிலும் பலர் செல்வச் செருக்கால் சோம்பேறிகளாகி விருதா காலக்ஷேபஞ் செய்கின்றனர். இவர்கள் செல்வத்தை முயற்சிவகையிற் செலுத்துவார்களாயின் நம்நாட்டுக்கு மிகவும் நன்மையுண்டாகும். அவர்கள் செல்வமும் பெருகும். இவர்கள் இதைக்கவனிப்பதில்லை. விலாப்புடைக்கத்தின்பதும் ஆட்டுச்சண்டை, கோழிச்சண்டை, ஜல்லிகட்டு, பக்ஷிகளைச்சுடுதல், முதலான தகாத காரியங்களையே தமக்குத் தொழிலாகக்கொண்டு வாணாளை வீணாளாக்கி மடிகின்றார். அந்தோ! இந்த மந்தமதிகளைச் சேர்ந்த மாந்தர்களும் பேஷ் பேஷ் என்று இச்சகம்பேசிவருகிறார்களேயன்றி இடித்துக்கூறுவாரில்லையே, யாரேனும் இடித்துரைக்க வந்தாலும் அவர்களைக் கடித்துரைக்க வருகின்றனர். செல்வர்கள் மட்டும் முயற்சியின் பெருமையையும் பலனையும் கவனித்து தங்கள் மனத்தைச் செலுத்த முன்வருவார்களானால் நம் நாட்டுக்கு வறுமை யென்பது வறுமைப்பட்டொழியுமே. ஆதலால் ஏழைகள் பணக்காரர் யாவரும் அவரவர்க்குத் தக்கவகையில் முயற்சி செய்து பொருளும் புகழும் புண்ணியமுமடைந்து தேச க்ஷேமத்தை யுண்டாக்கும்படி கடவுள் கருணை செய்வாராக.

"மானுட னொருவன் றனக்கருஞ் செல்வம் வாய்க்கவென் றனுதின முயற்சி, தானுஞற் றவனேற் கடவுளு மதனைத் தந்தளிக் குவர்"

"நெடிது பற்பகல் செல்வினு நிரம்புவ தொன்றை
யிடைவி டாமலே முயன்றுபெற் றிடுகின்ற தியற்கை"

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

ஓர் மிட்டாய்க் கடைக்காரன் கதை.

[115-ம் பக்கத் தொடர்ச்சி]

குறித்த சில வருடங்களும் கழிந்தன. ஸாது கடையை நோக்கிவந்தார். கடையைக்காணோம். பழைய மிட்டாய்க் கடைக்காரன் வீட்டுக்குப்போனார். அவ்வீட்டு வாயிற்படியண்டை இருந்த பசியால் வருந்திய ஒரு மெலிவான நாய் "லொள்" என்று குரைத்து அவர்மேல் விழுந்தது. உடனே அவர் வீட்டுக்குள்ளிருப்பவர்களைக் கூவியழைத்தார். மூத்த குமாரன் வெளியே வந்தான். அவனிடத்தில் ஸாது குடும்ப யோகக்ஷேமங்களை விசாரித்து எருதின் சங்கதியையும் கேட்டார். அதற்கவன் "கனம் மிகுந்த ஐயா!, ஐயோ! அந்த வுழை எருது இறந்து வருஷம் ஒன்றாயிற்றே. ஆ! ஆ!! என்னமாடு! என்னமாடு! என்ன நல்லகுணம்! அது தின்றதோ அறச்சிறிது; செய்தவேலையோ மிகப்பெரிது. காலை முதல் மாலை வரை பரபரவென்று வேலைசெய்யுமே! இனிமேல் அம்மாதிரி எருது கிடைப்பது அரிது அரிது" என்றான்.

சாது இதைக்கேட்டு ஞானதிருஷ்டியினால் பார்த்தார். எருதாய் இருந்த மிட்டாய்க் கடைக்காரனே இப்போது இந்த நாயாகப் பிறந்து தன் குமாரர்களிட மிருக்கிற கொஞ்ச சொத்தைச் சாவதானமாகக் காத்துக்கொண்டிருப்பதையும், ஒரு துரும்புகூட வெளியேறிப் போகாமலிருக்கும்படி வீட்டிற்கு வருபவர்களை எல்லாம் குரைத்துப் பாய்ந்து மேல் விழுந்து பிடுங்கப்போவதையும் கண்டார். ஒருவருமில்லாச் சமயம் பார்த்து முன்போல கையில் ஜலமெடுத்து மந்திரித்து அதனைச் சுவானத்தின் தலைமேல் தெளிக்கவே அதற்குப் பூர்வஞானம் உதித்துவிட்டது. உதித்தலும், ஸாது தான் வந்த காரியத்தையும் தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் அறிவித்தார்.

உடனே அந்த நாய் தலைவணங்கி அவர் காலில் விழுந்தழுது தன்னுடைய மகா கஷ்டங்களையெல்லாம் தெரியப்படுத்தி "ஓ மஹாநுபாவா! இன்னும் கொஞ்ச வருஷ கெடு வேண்டுகிறேன். ஊரில் திருட்டுப்பயமதிகம். இருக்கிற கொஞ்சசொத்தையும் கள்வர்

கைப்பற்ருமல் நான் நாயாக இருந்து காப்பாற்றி வருகிறேன். பாபமெல்லாம் தீர்ந்தபின்னுவது இருக்கிற சொத்தைக்கொண்டு காலக்ஷேபம் செய்து என் குமாரர்கள் முன்னுக்குவர மாட்டார்களா என்பது தான் என் எண்ணம். நான் பாடுபட்டுத்தேடியவைகளைத் திருடர் கைப்பற்ற எனக்கு மனம் வரவில்லையே" என்ருன். "இம் மூடனேடு இனி நியாயம் எடுத்து உரைப்பதில் உபயோகமில்லை" என்று ஸாது எண்ணி இன்னும் சில வருஷம் கடந்து வருவதாக ஒப்புக்கொண்டு சென்றுவிட்டார்.

இக்கெடுவும் முடிந்தது. விடா முண்டனுகிய ஸாது திரும்பவும் வந்தார். மிட்டாய்க் கடைக்காரன் வீட்டைக் காணும், அந்த இடத்தில் புதிதாகக் கட்டப்பட்ட இரண்டு குடிசைகள் இருந்தன. சமாசாரம் என்னவென்று சாது விசாரித்தார். குமாரர்களிருவரும் ஒருவர்க்கொருவர் சண்டைபோட்டுக்கொண்டு வியாச்சியம்நடத்தி வெகுஏழைமையான ஸ்திதிக்கு வந்த விஷயம் அறிந்தார். அவர்கள் குடியிருந்த ஒரு குடிசைக்குள் மெதுவாக நுழைந்தார். முன் உறுமிக்குரைத்து மேல் விழுந்த நாய் அங்கில்லை. ஞான திருஷ்டியினுல் பார்த்தார். மிட்டாய்க் கடைக்காரன் நாயுடல் நீங்கி சர்ப்பமாய்ப் பிறந்து தன் பழைய வீட்டுப் பண அறையில் பாதலத்தில் ஒரு பொந்துக்குள் இருந்துகொண்டு பவுன்போட்டுப் புதைத்து வைத்திருந்த ஓர் வெண்கலப்பானையைச் சுற்றிக்கொண்டு அப்பணத்தைக் காப்பாற்றி வருகிற விஷயம் இவர்க்குத் தெரியவந்தது.

இத்தருணத்தில் சகோதரரிருவரும் ஒருவர்க்கொருவர் சண்டைபோட்டுக்கொண்டு குடிசைக்கு வெளியே வந்தார்கள். கண்டார்கள் ஸாதுவை. பார்த்தாயா தம்பி இந்தத் துடைகாலி மொட்டையை?. இவ்விடியாமூஞ்சி என்று கால் அடிவைக்கத்தொடங்கினுனே அன்று முதல் ஒவ்வொருதரமும் ஏதேனும் கஷ்டம் நேரிட்டுக்கொண்டும் தரித்திரத்திற்கு மேல் தரித்திரம் தப்பாமல் வந்து கொண்டுமே இருக்கிறது." என்று அவர்களில் பெரியவன் சொல்லிக்கொண்டே சாதுவை நோக்கி,

"ஏ! ஏழுவிட்டு மூதேவியே! பிரத்தியக்ஷ சனீசுவர பகவானே! இந்நிமிஷமே இவ்விடம்விட்டுத் தொலைந்து ஓடு. இல்லாவி

டில் இன்று உனக்குப் பிறந்த நாளும் திருவாதிரையும் பார்த்துக் கொள். உன்னைக் கொன்றே போடுவோம்" என்றான்.

கேட்டார் ஸாது. அவர் தருமமும் சாந்தமும் தயாளமும் ஓர் உருவெடுத்தவர். புன்சிரிப்போடு அவர்களைப் பார்த்து "என்ன என் கண்மணிகாள்! கோபம்வேண்டாம். நீங்கள் இவ்வளவு தரித்திர திசைக்கு வந்துவிட்டீர்களா? உங்களுக்குத் திரவியம் வேண்டுமா? வேண்டுமானால் உங்கள் தகப்பனார் முன்படுத்து உறங்கிய அறைக்குட் சென்று கீழே வெட்டிப் பாருங்கள். அவ்விடத்தில் கிடைக்கிற பணத்தை இருவரும் சமமாகப் பாகித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அவ்விரு சகோதரர்களும் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்து அவ்வாறே அவ்வறைக்குட்சென்று தங்கள் முழுப் பலத்தோடும் பூமியைத் தோண்டினர். குழிக்குள் இறங்கினார்கள். அவ்வெண்கலப்பானையண்டை வந்தவுடன் அதன் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருந்த சர்ப்பம் "புஸ்" என்று அவர்கள்மேல் சீறிப்பாய்ந்தது. இதைக்கண்டு இருவர்களும் திடுக்கிட்டுப்பதறி,

"ஆ! ஆ!! மோசம்போகப் பார்த்தோமே. இது வரை கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டு வந்த போக்கிலி பாஷண்டித் தடிசந்நியாசி நம்மைத் தொலைத்து விடக் கருதியல்லவோ இச்சர்ப்பத்தின் வாய்க்கு இரையாக்கப் பார்த்தான். நல்லது; அவனை நையப்புடைத்து எமலோகம் அனுப்புவோம்" என்று தீர்மானித்துக்கொண்டு தடியும் கையுமாய் அவர் மேல் பாயலாயினர்.

இவர்களது உட் கருத்தைச் சாந்த சீலராகிய சாது அறிந்து அவர்களைப்பார்த்து என் குழந்தைகாள்! என்ன! என்னைப்பொய்யனென்று நினைத்தீர்கள்? உங்களுக்கு வெண்கலப்பானையின் கழுத்துப் பளபள வென்று மின்னுவது கண்ணுக்குத் தெரியவில்லையா? வேண்டிய திரவியம் அதற்குள் இருக்கிறது. சர்ப்பத்தைக் கொல்லுங்கள். திரவியமெல்லாம் உங்களுடையதாய் விடும்" என்றார்.

இதைக்கேட்டு அவர்கள் கொஞ்ச தூரத்திலிருந்து கொண்டே அப்பொந்தைப் பார்த்தார்கள். ஒரு பானை துருப்பிடித்து இருப்ப

தையும் அதன் விளிம்பு மின்னுவதையும் கண்டார்கள். கண்டவுடன் களிப்புற்றுச் சாதுவின்பேரில் வைத்திருந்த கொடிய துவேஷத்தை ஒழித்து அக்கோபத்தை எல்லாம் சர்ப்பத்தின் மேல் தாக்கி அதை அடித்துக்கொன்று திரவியம் முழுமையும் எடுத்துக்கொண்டார்கள்.

மிட்டாய்க் கடைக்காரனுக்குத் தன் சொத்திலிருந்த பற்றும் இப்பாம்பு ஜன்மத்தோடு முடிந்து விட்டது. ஏனெனில் அவன் சொத்து ஒன்றும் மீதம் கிடையாது. அவன் ஆவி பிரிந்தபின் அவனை ஸாது தன்வாக்குப் பிரகாரம் மேலான சுக வைபவங்கள் அநுபவிக்கும்படி கோலோகத்திற்குக் கொண்டுபோய் விட்டனர். சுபம்! சுபம்!!

இக்கதையால் உயிரென்றால் சாதாரணமாக யார்க்கும் வெல்லம் என்பதும் இவ்வுயிர் மீதும் பிரபஞ்ச வாழ்க்கையின் மீதும் எவ்வளவு அபிமானம் மனிதர்க்கிருக்கிற தென்பதும், "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதும் இனிது விளங்கும்.

ம. ஜகதீசையர்.

பர்த்ருஹரி நீதிசதகம்.

1. தேசம் காலம் முதலியவைகளால் அளவிடக் கூடாததும், நித்யமாயும், 'சித்' ஸ்வரூபியாயும், ஆத்மஞானத்தால் மாத்திரம் அறியக் கூடியதாயும், சாந்த ஸ்வரூபியாயும் விளங்குகின்ற 'ஜ்யோதி'யை நமஸ்கரிக்கின்றேன்.

1. மூர்க்கர் படலம்.

2. கற்றவர்கள் (பிறருக்குக் கற்பிப்பதில்) பொறாமைப் படுகின்றார்கள்; தனவான்களோ கர்வத்தால் (படிக்காமலே) கெட்டுப் போகின்றார்கள்; மற்றவர்களோ கற்க முடியாதவர்களா யிருக்கின்றார்கள்; ஆதலால் கல்வி இருந்த விடத்தே யழிந்துபோகின்றது.

3. (ஒன்றும்) அறியாதவனைத் திருப்தி செய்வது எளிது, விசேஷமா யறிந்தவனைத் திருப்தி செய்வதோ அதிலும் எளிது;

ஆனால் அற்ப அறிவால் கர்வங்கொண்ட மனிதனைத் திருப்திசெய்யப் பிரமனாலும் முடியாது.

4. மகரத்தின் பற்களினிடையினின்று பலாத்காரமாய் இரத்தினத்தைப் பிடுங்கி விடலாம்; கரை புரண்டுவரும் அலைவரிசைகளுடன் கூடிய கடலையும் கடக்கலாம்; சினங்கொண்ட பாம்பைச் சிரவிசினில் பூமாலைபோல அணியலாம்; ஆனால் பிடிவாதங்கொண்ட மூர்க்கன் மனதைத் திருப்திசெய்யவே முடியாது.

5. கஷ்டப்பட்டாவது கல்லைப் பிழிந்துகூட எண்ணெயெடுக்கலாம்; தாகங்கொண்டவன் கானலிலும் தண்ணீர் குடிக்கலாம்; தேடித்திரிந்தால் ஒரு வேளை முயற் கொம்பும் சம்பாதிக்கலாம்; ஆனால் பிடிவாதங்கொண்ட மூர்க்கன் மனதைத் திருப்தி செய்யவே முடியாது.

6. (ஒருவன்) இளந்தாமரை(த்தண்டு)க்கயிற்றால் யானையைக் கட்டமுயலலாம்; சிரீஷ மலரிதழால் வைரக்கல்லை யுடைக்க முய(ல்வான்)லலாம்; கடல் நீரைத் தேன்திவலையால் இனிக்கச்செய்ய ஆசைப்ப(டுவான்)டலாம்; ஆனால் தன் தேன் மொழிகளால் மூர்க்கனை நல்வழிப்படுத்த எவன் தான் முயல்வன்?.

7. அறிவின்மையை மறைக்க ஓர் மறைவு செய்து பிரம்மாவானவர், (அறிவற்றவர்களுக்கு) அதிக உபகாரமாக அவர்கள் ஸ்வாதீனமாகவே வைத்திருக்கின்றார்; அதாவது—விசேஷமாய்க்கற்றவர்கள் நிறைந்த ஸபையில் மௌனமாயிருப்பதே மூடர்களுக்கழகு.

8. எனது சிற்றறிவால், யானைபோல மதங்கொண்டு கண் தெரியாமல் திரிந்தபொழுது, நான் எல்லா மறிந்தவனென்று என் மனம் கர்வங்கொண்டிருந்தது; புத்திமான்கள் ஸகவாசத்தால் ஏதோ கொஞ்சமறிந்தபொழுது நான் மூடனென்று (தெரிந்துகொண்டேன்) என் கர்வமும் ஜ்வரம் (விலகுவது போல்) விலகிவிட்டது.

9. புழுக்கள் நிறைந்ததும், உமிழ் நீரால் நனைந்ததும், துர்நாற்றமுடையதும், தொடுவதற்கே யோக்கியமற்றதும், சதைப்பற்றேயில்லாததுமான கழுதை யெலும்பை, அதற்கொப்பான ருசியில்லையென்று ஆவலுடன் ஒரு நாய் கடித்துக் கொண்டிருக்கையில், பக்க

த்தில் தேவேந்திரன் நிற்கக்கண்டாலு மவனை அது லக்ஷியம் செய்ய மாட்டாது. தாழ்ந்த ஜந்து தனக்குக்கிடைத்த வஸ்துவின் கேவலத்தைக் கவனியாதல்லவா?

10. ஸ்வர்க்கத்தினின்று, சிவன்தலை மேலும், சிவன் தலையினின்று மலைமேலும், மலையுச்சியினின்று தரையிலும், தரையினின்று கடலிலும், (இவ்விதமாய்) கங்கையே தாழ்ந்த நிலைமைக்குவந்துவிட்டது. ஆதலால் விவேக மற்றவர்களுக்குக் கேடு பலவிதமாயேற்படக் கூடியது.

11. நீரால் நெருப்பையும், குடையால் சூரியதாபத்தையும், கூர்மையான ஈட்டியால் பெரிய மதயானையையும், தடியால் பசு கழுதை முதலான வைகளையும், மருந்தால் வியாதியையும், பலவித மந்திரங்களாலும் பிரயோகங்களாலும் விஷத்தையும், அடக்கிவிடலாம்; எல்லாவற்றிற்கும் சாஸ்திரத்தில் மருந்து (உபாயம்) சொல்லியிருக்க மூர்க்கனுக்கு (மாத்திரம்) மருந்தில்லையே.

---

2. கல்விப்படலம்.

12. நீதிமார்க்கத்தை யனுசரித்து நன்றாய்ப் பேசக்கூடியவர்களும், சிஷ்யர்களுக்குக் கற்பிக்கக்கூடிய அநேக சாஸ்திரங்களை யறிந்தவர்களுமான பேர்பெற்ற கவிகள், எந்த ராஜாவின் ராஜ்யத்தில் தரித்திரர்களாய் இருக்கின்றார்களோ அந்தக் குறைவு அரசனுக்குத்தான்; புத்திமான்களோ தனமில்லாமலே, ப்ரபுக்களாக விளங்குகின்றார்கள். அருமை (பரிக்ஷை) தெரியாதவர்கள் இரத்தினத்தைக் குறைவாய் மதித்தால், அது அவர்கள் குறைவேயொழிய இரத்தினத்தினுடையதன்று.

13. கல்வியென்ற செல்வமானது திருடர்கள் வசப்படுவதில்லை. எல்லாச்சுகத்தையும்தருகின்றது. யாசகர்(மாணாக்கர்) களுக்குக் கொடுக்கக் கொடுக்க விருத்தி யடைந்துகொண்டே யிருக்கின்றது. 'கல்பம்' முடிவிலு மழியக்கூடியதன்று. அப்படிப்பட்ட செல்வம் எவர்களிடத்திருக்கின்றதோ, அவர்களிடத்தில் அரசர்காள்! உங்கள் பெருமையைக் காட்டாதேயுங்கள். அவர்களுக்குச் சமம் யார்?

14. பரமதத்துவங்களை யறிந்த வித்வான்களை யவமதியாதே யுங்கள். புல்போல் அற்பமான உங்கள் செல்வத்தாலவர்க ளடங்க மாட்டார்கள். புதிய மத ஜலப் பெருக்கால் கறுத்த கன்னங்களுடன் கூடிய யானைகளைத் தாமரை நார்களால் கட்ட முடியாதல்லவா?

15. பிரம்மா எவ்வளவு கோபித்தாலும், ஹம்ஸங்கள் தாமரைக் குளத்தில் விளையாடும் சந்தோஷத்தை (வேண்டுமானல்) கெடுக்கலாம். ஆனல், அவர் பாலையும் நீரையும் பிரிக்கக்கூடிய உலகப்பிரசித்தமான அதன் சாமர்த்தியத்தா லேற்பட்ட கீர்த்தியைக் கெடுக்க வல்லவரல்லர்.

16. தோள்வளைகள், சந்திரகாந்தி யொத்த ஹாரங்கள், ஸ்நாநம், சந்தனம், புஷ்பம், ஜடையலங்காரம் இவைகளெல்லாம் மனிதனுக் கழகல்ல. நல்வார்த்தைகளுடன் கூடிய கல்வி யொன்றே மனிதனுக்கழகு. மற்ற ஆபரணங்களெல்லாம் அழியக்கூடியது. ஆதலால் கல்வியழகே எப்பொழுது மிருக்கக்கூடிய அழகு.

17. 'கல்வி' யென்பது, மனிதனுக்குயர்ந்த அழகு. மறைத்து வைக்கப்பட்ட செல்வம். கல்வி இன்பம் பயக்கும். கீர்த்தியை நாட்டும். சுகந்தரும். கல்வி மேலோர்க்கெல்லாம் மேலானது. அந்நியதேசம் செல்லுங்கால் கல்வியே தோழன். கல்வி தான் உயர்ந்த தெய்வம். அரசர்களால் மதிக்கப்படுவது கல்வியே. செல்வமன்று; கல்வியற்றவன் மிருகந்தான்.

18. மனிதர்களுக்குப் பொறுமை யிருந்தால் கவசமெதற்கு? கோபமிருந்தால் பகைவர் எதற்கு? தாயாதி யிருந்தால் நெருப்பெதற்கு? நண்பனிருந்தால் உயர்ந்த மருந்தெதற்கு? துஷ்டர்களிருக்குமிடத்தில் பாம்புகளெதற்கு? நல்ல கல்வியிருந்தால் செல்வ மெதற்கு? விநயமிருந்தால் ஆபரணங்களெதற்கு? நல்ல கவித்வ மிருந்தால் ராஜ்யந்தானெதற்கு?

19. பந்துக்களிடத்தில் தாக்ஷண்யம், வேலைக்காரரிடத்தில் தயை, துஷ்டர்களிடத்தில் வெறுப்பு, நல்லோரிடத்தில் அன்பு, அரசரிடத்தில் பக்தி, வித்வான்களிடத்தில் கபடமில்லாதிருத்தல், பகைவர்க்கெதிரில் சௌர்யம், பெரியோர்களிடத்தில் பொறுமை, மனைவி

களுக்கு (அதிகமாக) இடங்கொடாமை—இவ்விதமான தந்திரங்களிலெவர்கள் பயிற்சியடைந்தவர்களோ அவர்களிடத்தில் தான் உலகம் கட்டுப்பட்டு நிற்கும் (அவர்கள்தான் உலகத்தில் சரியானபடி காலங்கழிப்பவர்கள்.)

20. நல்லோர் ஸகவாஸமானது, புத்தியின் மந்தத்தைத் தணிக்கின்றது. வாக்கில் உண்மையை அமைக்கின்றது, கௌரவ புத்தியுண்டு பண்ணுகின்றது, கெட்டசெய்கையைத் தடுக்கின்றது, மனதில் உத்ஸாகத்தை யுண்டுபண்ணுகின்றது, எங்கும் கீர்த்தியை நாட்டுகின்றது, ஆஹா! அதுமனிதனுக்கு என்னதான் செய்யமாட்டாது? சொல்.

21. நன்மை செய்வோரும், நவரஸங்களுடன் கூடிய நற்கவியியற்றுவோரும் வாழ்க. வாழ்க! அவர்களுடைய கீர்த்தியெனும் சரீரத்துக்கு, ஜரை, மரணம் என்ற பயம் கிடையாது.

[இதை என்னுடைய உத்தரவின்றி யாரும் எடுத்து அச்சிடக்கூடாது]

R. வேதநாராயணசர்மா B. A., B. L,

அபிதான விளக்கம்.

———:o:———

அகஸ்தியர்.

இவர் ஒரு மகாரிஷி. ஊர்வசியைக் கண்டமாத்திரத்தில் மித்திரன், வருணன் இவ்விருவர்களுடைய இந்திரியமும் ஸ்கலிதமாகி ஓர் குடத்தில் விழ அதினின்றும் உற்பத்தியானவர். ஆகையால் இவருக்கு "மைத்ராவருணி, கும்பஸம்பவர், குடமுனி" என்னும் பெயர்கள் உண்டு. இவர் ருக் வேதத்தில் அநேக மந்திரங்கள் செய்திருக்கின்றார்.

உயர்ந்த விந்தியமலையை இவர் தாழச்செய்து அதைக்கடந்து சென்று தக்ஷிணபாரிசத்தில் தனது ஆச்ரமத்தை ஏற்படுத்திக்கொண்டார். இவர் காலத்தில் தான் முதல் முதல் ஆரியர்கள் விந்தமலைக்குத்தெற்கே குடியேற ஆரம்பித்தனர்போலும். இவர் "வாதாபி"

"வில்வலன்" என்ற அசுரர்களை நாசஞ்செய்தார். நகுஷ சக்கிரவர்த்தியை மலைப்பாம்பாகும்படி சபித்தார். தேவாஸுர யுத்தத்தில் விருத்திராசுரன் சமுத்திரத்தில் மறைந்துகொள்ள அவனைக் கண்டு பிடிக்கும்பொருட்டுத் தேவர்களுக்கு உதவியாய் சமுத்திரஜலம் முழுமையும் பானம் செய்தார்.

இவர் தமிழ்ப்பாஷைக்கு முதல் ஆசிரியர். இவர் காலம் முதல் தான் தமிழ் விருத்தியடைந்தது.

இவர் பெயர் வழங்கும்பொருட்டு "அகஸ்தியர்" என்று ஓர் நக்ஷத்திரமானது பேரிடப்பட்டிருக்கிறது.

[விந்தியம், வாதாபி, நகுஷன் என்பவைகளையும் பார்க்க]

அக்கினி.

நெருப்புக்கு அதிஷ்டான தேவதையாகிய இவர் வேதகாலம் முதல் ஆராதிக்கப்பட்டுவருகிறார். ருக்வேதத்தில் இவரைப்பற்றி அனேக ஸ்தோத்திரங்களும், மந்திரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவர் பூமியில் அக்கினியாகவும், ஆகாசத்தில் இந்திரனாகவும், மருத்தாகவும், மின்னலாகவும், சுவர்க்கத்தில் சூரியனாகவும் விளங்குகின்றார். இவர் வேதகாலத் திருமூர்த்திகளில் ஒருவர். இவர் அங்கிரஸின் புதல்வரென்று சொல்லப்பட்டிருப்பதால் ஒருவேளை அங்கிரஸால் அக்கினியை கடையும் விதமானது கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம். அல்லது அக்கினி உபாஸனை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். முன்னாளில் புரசங்கட்டை (அரணி) களைக்கடைந்து அக்கினியுண்டுபண்ணி வந்தார்கள். இப்பொழுதும் யாகாதிகளுக்கு அவ்விதம்தான் செய்து வருகிறார்கள். இவர் மனைவி "ஸ்வாஹா" என்பவள். இவர் வாஹனம் ஆடு. புராணகாலத்தில் இவர் அஷ்டதிக்குப்பாலர்களில் ஒருவராய்த் தென்கிழ் திசைக்கு அதிஷ்டான தேவதையாய் விளங்குகின்றார்.

இவர் முன்னொரு காலத்தில் கொடிய ரோகத்தால் வருந்தி அர்ச்சுனன் உதவியால் காண்டாவனத்தை எரிக்க ஆரம்பித்தனர், இந்திரன் முதலானவர்கள் இதைத்தடுக்க மழைபொழிந்தனர். அர்ச்சுனன் சரக்கூடுகட்டி மழையைத் தடுக்கவே அக்கினி காண்டா

வனமுழுமையும் தஹித்துவிட்டார். அக்கினி திருப்தியடைந்து அர்ச்சுனனுக்குக் காண்டீவமென்ற வில்லைப் பரிசளித்தார்.

[இக்கதையானது முன் ஆரியர்கள் பெருங்காடுகளையழித்து நாடுகளாக மாற்றும் விதத்தைக் குறிக்கின்றது.]

அபிமன்யு.

இவன் அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் பிறந்தவன். பலராமர், கிருஷ்ணன் இவர்களுடைய மருமகன். இவன் பலராமர் புதல்வி "வத்ஸலை" யையும், விராடராஜன் புதல்வி உத்தரையையும் மணம் புரிந்தான். இவன் மகா பாரதயுத்தத்தில், மிக்க பௌருஷத்துடன் போர்புரிந்து இரண்டாம் நாள் போரில் துரியோதனன் குமாரன் லக்ஷ்மண குமாரனைக் கொன்றான். ஆனல் 13-ம் நாள் போரில் கௌரவ சேனையால் வகுக்கப்பட்ட பத்மவியூகத்தில் தனிமையாய்ச் செல்ல, கௌரவர்கள் அதர்மயுத்தம் செய்யவே கடைசியில் ஜயத்ரதனல் கொல்லப்பட்டான்.

இவன் மனைவி உத்தரைக்குப் பிறந்தப் பரிக்ஷித்து என்பவன் யுதிஷ்டிரருக்குப்பின் பட்டத்துக்கு வந்தான்.

[வத்ஸலா என்பதையும் பார்க்க.]

அஹல்யா.

இவள் பிரமாவால் சிருஷ்டிக்கப்பட்டவர்களில் மிகுந்த அழகானவள். இவளுடைய ரூபலாவண்யத்தைக்கண்டு அநேகர், இவள் மேல் காதல்கொண்டு இவளை யாசிக்க பிரமா "முதல் முதல் மூன்று தடவை பூமிப் பிரதக்ஷணஞ் செய்து முடிக்கின்றவனுக்குத்தான் இவளை விவாகம் செய்து கொடுப்பே" னென்று வாக்களித்தார். இந்திரன் முதலானவர்கள் தத்தம் வாகனங்களேறி அதிவேகமாய் பூமிப் பிரதக்ஷணம் செய்ய ஆரம்பித்தார்கள். கௌதமர் பூமிக்குப்பிரதிநிதி பசுவென்றறிந்து அதை மூன்று தரம் சுற்றி வந்து நமஸ்கரித்தார். பிரமா, இவர் புத்திசாலித்தனத்தை மெச்சி இவருக்கு அவளை விவாகம் செய்வித்தார்.

இவ்வாறு ஏமாறிப்போன இந்திரன் அகல்யை மேலுள்ள மையலால், தருணம் பார்த்திருந்து கடைசியாய், ஓர் நடுநிசியில் கோழி ரூபமெடுத்து கௌதமர் ஆச்ரமம் சென்று கூவ, கௌதமர் பிராதகாலமாயிற்றென்று எண்ணி ஸ்நாநத்துக்குச் சென்றார். உடனே இந்திரன் பூனைரூபமெடுத்து உள்ளே சென்று அகல்யைக்குத் தன் நிஜ அழகைக் காண்பிக்க அவளும் இவன் மேல் காதல் கொண்டு தகாத செய்கைக்கு உடன்பட்டுவிட்டாள்.

ஸ்நாநத்துக்குச் சென்ற கௌதமர் நிசிவேளையாயிருப்பதை யறிந்து, சந்தேகத்துடன் திரும்பி வந்து ஆச்ரமத்துள் நுழைய இவ்விருவர்களும் இருக்கும் நிலைமையைக் கண்டு கோபங்கொண்டு இந்திரனை வீர்யமற்றவனாய்ப் போகும்படி சபித்து விட்டு அகல்யையும் தள்ளிவிட்டு, (கல்லாகச்சபித்ததாகவும் சொல்வதுண்டு) ஹிமயமலைக்குத் தவம் செய்யப்போய்விட்டார்.

பிறகு விசுவாமித்திரருடன் இராமலக்ஷ்மணர்கள் இப்பிரதேசத்துக்கு வந்தகாலத்தில் அகல்யைக்கு சாபவிமோசனமாய்த் தன் கணவனுடன் கூடி வாழ்ந்து வந்தாள். இவளைப் பஞ்சகன்னிகைகளில் ஒருத்தியாகச் சொல்வதுண்டு.

அங்கிரஸ்.

பிரம்மாவின் மானஸீக புத்திரர். பிரஜாபதிகளில் ஒருவர். இவரும் இவர் வம்சத்தாரும் ருக்வேதத்தில் அநேகம் ஸூக்தங்கள் செய்திருக்கின்றார்கள். இவரைப் பிருஹஸ்பதியென்றும், தேவர்களுக்கு ஆசாரியன் என்றும் சொல்வதுண்டு. இவரை அக்நியின் பிதாவென்று சொல்வதுமுண்டு. இவர் மனைவி தக்ஷன் குமாரியாகிய ஸ்மிருதி. புதல்வரில் முக்யமானவர்கள் உதத்யர், பிருஹஸ்பதி, மார்க்கண்டேயர்.

ஸப்தரிஷி மண்டலத்தில் அங்கிரஸ் என்ற ஒரு நக்ஷத்திரமுண்டு.

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B.A. B.L.

ஐவன்ஹோ.

(122-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர்கள் கர்த்தையும் வாம்பாவையும் கண்டு நின்று "ஸிட்ரிக்கின் மாளிகைக்கு வழியெது?" என்று கேட்க, விகடனான வாம்பா, அவர்களைப் பார்க்கச் சற்றும் விருப்பமில்லாதிருந்தவனாதலால் ஸிட்ரிக்கின் மாளிகைக்கு வழிகாட்ட விரும்பாமல், அவர்களை ஷெப்பீல்டுக்கு அனுப்பிவிடவேண்டுமென்று உத்தேசித்து, "சாமி இந்தப் பாதையோடு நேராகச் செல்லவேணும். சென்றால் அங்கே ஒரு ஆழ்ந்தசிலுவை நிற்பதைக் காணுவீங்க. அதைக் கண்டவுடன் இடது பக்கத்திலுள்ள வழியோடு செல்லுவீங்களானுக்கே மழை வருவதற்கு முன்னமேயே தங்குமிடம் அடைவீங்க" என்று சொன்னான். சன்னியாசியாகிய அய்மேர் (Aymer) இவர்களுக்கு வந்தனமளித்துத் தானும் கில்பர்ட்டுமாகக் குதிரையோடு கொஞ்சதூரம் சென்றதும் அச்சிலுவையுள்ள பக்கத்தில் நான்குவழி பிரிவதைக் கண்டார்கள்.

"இடதுகைப் பக்கமாய் அல்லவா போகவேணுமென்று சொன்னாற் போலவிருக்கிறது" என்றான் சந்நியாசி.

"இல்லை; இல்லை; எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது வலதுபக்கமாக என்றல்லவோ சொன்னான்" என்றான் கில்பர்ட்.

இருவரும் தான் தான் சொன்னதே சரி யென்று ஆக்ஷேபித்துப் பிடிவாதத்துடன் நிற்கையில் அச்சிலுவையின்கீழே பார்வைக்குத் தூங்குவது போலப்படுத்திருக்கும் ஒரு வழிப்போக்கனைக் கண்டார்கள். அவனைப் பார்த்தால் பாலஸ்தீனாவுக்கு யாத்திரை சென்று இப்போதே திரும்பி வந்தவன் போலத் தோன்றிற்று.

"அவனை ஈட்டியின் அடிப்பக்கத்தால் தட்டி யெழுப்பு" என்று கில்பர்ட் தன் பரிவாரத்தில் ஒருவனுக்குச் சொல்ல அவனும் அவ்வாறே செய்தான். உடனே வழிப்போக்கன் திடீரென்று எழுந்து "நீங்கள் யாராயிருந்தாலும் சரி, தூங்குகின்ற ஒருவனை இவ்வாறு எழுப்புவது கொஞ்சங்கூட உங்களுக்கு மரியாதை இல்லை" என்று சொன்னான்.

"இல்லை ஐயா நாங்கள் விட்ரிக்கின் வீட்டிற்குப்போக வழிதெரியாமல் திகைத்து நிற்கின்றோமாதலின் தங்களைக் கேட்டால் தெரியுமென்று எண்ணி அது கேட்பதற்காகவே எழுப்பினோம்' என்று அய்மேர் சன்னியாசி சொன்னான்.

"நானும் அங்கேயே தான் போகிறேன். வழி கண்டுபிடிப்பது கஷ்டம். நிரம்பவும் அலைந்து இளைப்பாயிருப்பதால் எனக்கு ஒரு குதிரை கொடுத்தால் சவாரி செய்து உங்களுக்கு வழிகாட்டக்கூடும்" என்று அவ்வழிப் போக்கன் சொன்னான்.

உடனே அய்மேர் ஒரு குதிரைகொண்டு வரச்சொன்னான். அவனைச்சேர்ந்தவர்களில் ஒருவன் ஒருகுதிரையைக்கொடுக்க அதிலேறிக்கொண்டு வாம்பா காட்டிய வழிக்கு எதிர்ப்பக்கமாய், அடர்ந்த காட்டின் நடுவே எல்லாரையும் அவன் நடத்திச் சென்றான். கடைசியாக ஒரு வெட்டவெளி வந்ததும் அங்கே கண்ணுக்கு எதிரே பெரிய தாழ்ந்த ஒழுங்கற்ற கட்டிடம் தோன்றிற்று.

உடனே வழிப்போக்கன் "இதோ தெரிகிறதே இதுதான் விட்ரிக்கின் மாளிகை" என்றான்.

சன்னியாசி "பரிசுத்த பூமியினின்றும் இப்போது தான் வந்த ஒரு தேசாந்திரியாகிய உனக்கு இவ்வளவு நன்றாக இவ்வடர்ந்த காட்டின் வழியனைத்தும் தெரிந்தது வெகு ஆச்சரியமாகவிருக்கிறது" என்றான்.

'இல்லை ஐயா நான் இந்தப் பக்கத்திலே பிறந்து வளர்ந்தவன்' என்றான் வழிப்போக்கன்.

இவ்வாறு பேசிக்கொண்டு கொஞ்சதூரம் செல்லுமுன்னமே ஒரு பழைய கோட்டை கொத்தளத்தோடு கூடிய கட்டிடத்தின் சமீபம் போய்ச் சேர்ந்தார்கள். அதைச் சுற்றி ஜலம்நிறைந்த ஒரு விசாலமான அகழியும் அதைத் தாண்டிச் செல்ல ஒரு தூக்குப்பாலமும் (Draw Bridge) அதற்குள் மற்றொருமதிலும்வாசற்படியும் இருந்தன. உடனே கோயில் வீரனாகிய (Knight-Templar) கில்பர்ட் தனது கொம்பையெடுத்து வெகுஅவசரத்துடன் வேகமாய்ஊதினான். ஏனென்றால் மழை தாரைதாரையாய்ப்பொழிய ஆரம்பித்துவிட்டது.

இவர்கள் ஊதினதும் விசாலமான அந்தக்கட்டிடத்தின் நாலுபக்கங்களினின்றும் இருபது முப்பதுநாய்கள் குரைக்க ஆரம்பித்துவிட்டன. இவ்வாறு அதிகரித்த ஆரவாரம் உள்ளே உட்கார்ந்து கொண்டு தன்னுடைய தாய் நாட்டிற்கு அன்னியர் படை யெழுச்சியால் வந்த துன்பத்தையும் சுதேசிகளின் பலக்குறைவையும் துக்கத்துடன் எண்ணி ஆலோசனை செய்துகொண்டிருந்த வயது முதிர்ந்தவனும் ஆனல் கோபம் மட்டும் குறையாதவனுமாகிய ஸாக்ஸனுனவிட்ரிக்கின் காதிற்பட்டது.

உடனே கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒரு சேவகன் உள்ளே நுழைந்து "ஐயா சன்னியாசியான அய்மேரும் வீரருக்கெல்லாம் திலகம் போன்ற கில்பர்ட்டும் ஆஷ்பி என்ற ஊரில் நடக்கும் ஒரு போலிச்சண்டையின் பொருட்டுப்போகிற வழியில், இருட்டிவிட்டதால் இரவில் இங்கே தங்க விரும்புகிறார்கள். தங்கள் உத்தரவை எதிர்பார்த்து வெளியே நிற்கிறார்கள்" என்றான்.

விட்ரிக் எப்போதும் நார்மன்களிடம் நம்பிக்கையற்றவனும் அவர்கள் அகம்பாவத்தினிமித்தம் வெறுப்புற்றவனுமாதலால் வெகு அலட்சியமாய் "சீ! இருவரும் நார்மன்பசல்களா! ஆனல் என்ன! இராத்திரி ஒரு வயிற்றுச் சோற்றுக்காகப் பயந்து வழிப்போக்கர்களுக்கு விட்ரிக் கதவு அடைத்தான் என்ற அபவாதம் வருவானேன்? வரட்டும். வந்தால் ஒரு ராத்திரி தங்கினல் நல்லது; இல்லையென்றால் வழியோடே போய்விட்டாலும் நிரம்ப நல்லது' என்று எண்ணி அர்த்தாங்கீகாரமாகச் சொன்னான்.

பின்னுமவன் "நான் இந்த கில்பர்ட் என்பவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் அவனது இனத்தாருள் வெகு பராக்கிரமசாலியாம். அயோக்கியர்களுக்கெல்லாம் முதல்தர அயோக்கியனும். எல்லாக் கெட்ட நடத்தையும் உருவெடுத்தாற் போன்றவனும். அக்ம்பாவி, கொடியன், துஷ்டன், அசுத்தன், கன்னெஞ்சன், கெட்டவன், தெய்வப்பக்தியின்றி ஈசுவர நிந்தனை செய்வதுடன் பகவத் பக்தர்களையும் கண்டிப்பவனும். இவ்வாறு பலபேர் சொல்லக்கேள்வியுற்றிருக்கிறேன். ஆனலும்வழிப்போக்கர்களை உபசரிப்பது கிருஹஸ்தர்களின்முதன்மையான கடமையல்லவா? மழையோ பெய்கிறது. சுற்

றிப் பத்துமைலுக்கு நம்முடைய வீட்டைவிட்டால்வேறுதங்குமிடமும் கிடையாது. 'எந்த விருந்தினன் ஒரு கிருஹஸ்தன் வீட்டிற்கு வந்து மனம் நொந்து போகிறானோ அவன் அக்கிருஹஸ்தனுடைய புண்ணியங்களைக் கைக்கொண்டு தன் பாவங்களைப் பதிலாகக் கொடுத்துவிட்டுப்போகிறான்' என்று சாஸ்திரம் சொல்லுகிறது. கேவலம் இப்பாவியின் பாவம் நமக்கேன்? என்று சொல்லிக்கொண்டு "சரிதான் உள்ளே வரச்சொல்" என்று வந்த சேவகனுக்குப் பதில்சொல்லி அனுப்பினான்.

அனுப்பியதும் ஸிட்ரிக் எல்கிதா (Elgitha) என்னுந் தாதியை கூப்பிட்டுத் தங்களோடு சாப்பிட உட்கார ரோவேனா (Rowena) என்பவள் அன்று வரவேண்டாம் என்றும் ஆனால் அவளுக்கே வர வேண்டுமென்று இஷ்டமிருந்தால் மட்டும் வரட்டும் என்றும் சொல்லியனுப்பினான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் விருந்தினரெல்லாரும் பெரிய போஜன மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தக் கூடம் மிகவும் நீளமாயும் அகலமாயும் இருந்தது. ஆனால் கூரை மாத்திரம் நிரம்பத் தாழ்ந்து இருந்தது. அதன் ஒரு ஓரத்தில் பெரிய கணப்புச்சட்டி குளிர்காய வைத்திருந்தது. சுவர்களிலெல்லாம் கத்தி, கேடயம், கவசம், ஈட்டி, சூலம் முதலிய வேட்டைக்கும் யுத்தத்திற்கும் வேண்டிய அவசியமான ஆயுதங்கள் அனைத்தும் அடுக்கிவைத்திருந்தன. நடுவே காட்டுத்தேக்கு மரத்தால் செய்த வேலைப்பாடமையாத மேஜை ஒன்று போடப்பட்டிருந்தது. அதன் பலகைகள் நன்றாக இழைப்பு வேலை இல்லாமல் கரடுமுரடாகவே இருந்தன. அந்தச்சுவரின் ஒரு பக்கத்தில் மற்றவைகளைப்பார்க்கிலும் உயர்ந்த ஒரு பெரிய மேடை போடப்பட்டிருந்தது. இதன் மேல் ஸிட்ரிக்கும் அவன் குடும்பத்தாரும் மற்றப் பெரிய விருந்தினரும் சாப்பிட உட்காருவது வழக்கம். தாழ்ந்த இடத்தில் வேலைக்காரரும் மற்றும் இவர்களுடன் கூடவந்த பரிவாரங்களும் உட்கார்ந்தார்கள். ஏழு எட்டு பெரிய நாய்களும் சாப்பாடு எப்போது வருமென்று எதிர்பார்த்து ஆவலுடன் வாலை ஆட்டிக்கொண்டு நின்றன.

(இன்னும் வரும்.)

S. பஞ்சாபகேசசர்மா B. A.

* சரபோஜி மஹாராஜா அவர்களின் சத்திரங்களைப் பற்றிய நிரூபம்.

இந்தச் சத்திரங்கள் பெரும்பாலும் கடற்கரை ஓரமாகவே அமைந்திருக்கின்றன. அவ்விடங்களில் பூமி இயற்கையாகவே அதிக சாரமற்றது. ஆனால் இராமேசுவரத்திற்குப் போகும் பாதையும் அவ்விடத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. காசி, அயோத்தி, அரங்கபாத்து, பூனா முதலிய இந்தியாவின் பல இடங்களினின்றும் நாற்பதினாயிரம்ஜனங்கள் பிரதிவருஷமும் அந்தப்பாதையின்வழியே போய் வருகிறார்கள். முக்கியமாக இப்பிரயாணிகளை உத்தேசித்தே இச்சத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு சத்திரத்தையு மொட்டி ஒரு கோவிலும் விடுதிகளும் பாடசாலைகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

அவ்விடங்களில் இன்ன தருமங்கள் நடக்கின்றனவென்றும் இவ்வளவு தருமங்கள் நடக்கின்றனவென்றும் உமக்கு நான் எடுத்துக்காட்டுவேன்: பிராமணர் முதல் பறையர் ஈறாக, எல்லாப்பிரயாணிகளுக்கும், யாத்திரிகர்களுக்கு அவர்கள் யோகிகளாயினும் சாதுக்களாயினும், அதிதிகளாயினும் பகிராகிகளாயினும் மற்று யாவராயினும் எல்லாருக்கும் அன்னதானம்நடக்கின்றது. அன்னமாகவுண்ணப்பிரியப்படாதவர்களுக்கு அரிசி உப்பு புளி முதலிய சாமான்கள் கொடுத்து உதவப்படும். பாதி ராத்திரிவரையில் அன்னதானம் நடக்கும். அர்த்தராத்திரியானதும் ஓர் மணியடித்து அதுவரையிலும் சாப்பிடாதவர்கள் வந்து அவர்களுக்கென்று சமைத்து வைத்திருக்குமுணவை சாப்பிடும்படி உரத்துக்கூவப்படும். யாத்திரை செய்யமுடியாதவர்கள் சத்திரத்தில் எவ்வளவு காலம் தங்கினாலும் அவர்களுக்கு ஆகாரமாதிய நடக்கும். நான்கு வேதங்களையும் ஓதுவிக்க ஓர் ஆசிரியரும், பாடசாலை உபாத்தியாயரும், பலவகை நோய்கள், விக்கம்,

---

* இது தஞ்சாவூர் சம்ஸ்தானத்தில் சத்திரங்கள் ஏற்பட்டதன் கருத்தை விளக்கிச் சரபோஜி மகாராஜா அவர்கள் 1801ஆு ஜனவரிமீ 23உ யன்று பிரிடிஷ் ஸ்தானாபதி (Resident) க்கு எழுதிய நிருபத்தின் ஓர்பகுதியாகும்.

விஷகடி இவைகளைப்போக்க வல்ல மருத்துவனும் ஒவ்வொரு சத்திரத்திலும் உண்டு. தாய் தகப்பனில்லாமல் ஆதரவற்று அங்கு வரும் சிறுவர்கள் பாடசாலை உபாத்தியாயர்வசம் ஒப்புவிக்கப்படுவார்கள். அவர்களுக்குத் தினம் மும்முறை ஆகாரமும், வாரமிருமுறை எண்ணெய்முழுக்கும் நடக்கும். வேண்டும்பொழுது அவர்களுக்கு மருந்து உதவப்படும். உடுக்கத்துணியும் கொடுக்கப்படும். அத்தியந்தஜாக்கிரதையுடன் அவர்கள் பாதுகாக்கப் படுவார்கள். எந்தத்துறை சாஸ்திரங்களில் தங்களுக்குப் பிரிய மிருப்பதாகத் தெரிவிக்கின்றார்களோ, அல்லது தெரியவருகிறதோ அந்தந்தத் துறையில் அவர்கள் பயிற்றப்படுவார்கள். அதில் அவர்களுக்குத்தக்க ஞானம் உண்டானபின் கலியாணச்செலவு முதலியனவும் கொடுக்கப்படும். சத்திரத்திற்கு வந்த பின்னேனும், வரு முன்னேனும் நோய் கொண்டவர்களுக்கு தக்க அவிழ்தமும் பத்தியமும் கொடுக்கப்படும். அவர்கள் நோய் தெளிந்து எழும் வரையில் மிக்க அன்புடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவார்கள். சத்திரத்தில் தங்கியிருக்கும் பொழுது இறப்பவர்களுக்கு அவர்களுடைய ஜாதியாசார முறைப்படி உத்தரக்கிரியைகள் நடத்தப்படும்.

குழந்தைகளுக்குப் பால் உதவப்படும். கர்ப்பிணிஸ்திரீகள் விசேஷ அன்பு ஆதரவோடு போற்றப்படுவார்கள். சத்திரத்திலிருக்கும்பொழுது அவர்கள் பிரசவிக்கும்படி நேரிட்டால் அந்தச்செலவு சத்திரத்தைச் சேர்ந்ததாகும். அவர்களுக்கு மருந்து கொடுப்பதுடன் பிரசவித்து மூன்றுமாதம் அளவும் சத்திரத்திலேயே தங்கியிருக்க இடம் பெறுவார்கள்.

உபநயனமேனும் கலியாணமேனும், பிதாவின் உத்தரகிரியையேனும் செய்ய செலவுக்கில்லை யென்று சத்திர அதிகாரியிடத்திலாவது அரசாங்கத்திலாவது தெரிவித்துக்கொள்பவர்களுக்கு அததற்குத் தக்கவாறு செலவுக்குக் கொடுக்கப்படும்.

இந்தச் சத்திரங்களுக்காக ஏற்பட்டிருக்கும் நிலங்கள் பொதுவாக அதிக சாரமில்லாதவையாதலால் மழைக்குறைவால் செலவுக்கு வேண்டிய அளவு வரும்படி வராமற் போக நேர்கின்றது. அவ்வாறு

நேரும் பொழுது இந்தத் தருமங்களை நடத்துவதே எனது கௌரவத்திற்கு ஒப்புயர்வில்லாப்பெருமையாதலால் அவைகளுக்குக் குறைவுண்டாகாதிருக்கும்படி, குறைவை நிரப்புதற்கு வேண்டிய நெல்லும் பணமும் சர்க்காரிலிருந்து சத்திரங்களுக்கு அனுப்புவது என் வழக்கம். ஹாரிஸ் துரை சபை நிர்வாகம் ஏற்கவந்த பிறகு சத்திரங்களின் செலவிற்கு ஏராளமான நெல் வேண்டுமென்று பலமுறை அவரைக் கேட்டிருப்பது அவருக்கு நினைவிருக்கும்.

* * * * *

இந்தத் தருமங்களை நானே உண்டாக்காவிடினும் அவைகள் என் குடும்பத்தை ஒட்டியவை என்பதும் எனது புகழுக்கும் க்ஷேமத்திற்கும் அவசியம் என்பதும் எனது கொள்கை. தஞ்சாவூர் சம்ஸ்தானம் தருமத்திற்குப் பேர் போனதென்று உலகெலாம் கொண்டாடப்படுகின்றது. அதற்குத் தரும ராச்சியம் என்றுபெயர். இந்தப் பெயரால் நாடெல்லாம் எனக்கு உண்டாயிருக்கும் புகழையே எனது பதவிக்கு ஒப்புயர்வில்லாக் கௌரவமும் மேன்மையுமென எண்ணுகின்றேன். எனது முன்னோர்களாலும், எனதுபிதா துளஜாஜி ராஜாவினாலும் இத் தருமங்கள் நடப்பதற்கு ஏற்படுத்தப்பட்டவரும்படி சம்ஸ்தான வரும்படியுடன் சேர்ந்ததென ஒருபோதும் எண்ணப்பட்டதில்லை. அவர்களெல்லோரும் இத் தருமங்களை அந்தரங்கப் பிரியத்துடன் ஆதரித்து நடத்தி வந்தார்கள். அவ்வாறு செய்ய வேண்டுமென்பதே எனது அந்தரங்க எண்ணமும்.

ம. சுப்பிரமணிய ஐயர்.

நூல் ஆராயுமுறை.

"நூல்" என்பது உவமவாகு பெயராகிய விலக்கணம் பெறப்பட்டு நாம் வைத்துப் படிக்கும் புத்தகத்தினைக் குறிக்கின்றது. "பஞ்சிதன் சொல்லாப் பனுவலிழையாக" என்னும் நன்னூல் பொதுப்பாயிரத்திலுள்ள வெண்பாவால், நூல் என்பதன் பொருள் நன்கு புலப்படும்; அதாவது, பஞ்சுகொண்டிழைத்து நூற்கப்படும் நூல்போலச் சொற்கொண்டு தொடுத்து அமைக்கப்படுவது. அன்றி மேலைவெண்பாவுக்கடுத்த "உரத்தின் வளம்பெருக்கி" என்னும் வெண்பாவும் நூல், என்பதனுள்ளுறை பொருளை விளக்கியே நிற்கின்றது. இனி நூலென்ற சொற்கு, இறையனாரகப்பொருளில் பொருள்விரிக்குமிடத்து நூல்போறலின் நூல் என்ப. பாவைபோல்வாளைப் பாவை யென்பது போல. என்னை? நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவன்மகளேத் தனது செயற்கை நலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம். உலகத்து நூல் நூற்றலென்பது அவ்வாறே சுகிர்ந்துபரந்த சொற்பரவைகளாற் பெரும் புலவன் தனது உணர்வினது மாட்சிமையான பிண்டம் படலம் ஒத்துச்சூத்திரமென்னும் யாப்பு நடைபடக்கோத்து நூற்கப்படலினென்பது. இனி ஒரு சாரார் நூல்போலச் செப்பஞ் செய்தலின் நூல் என்ப. எனவிவை யனைய பிறவுங் கூறுவது மீண்டுணரத்தக்கதாம் "ஆராயுமுறை"யென்றதென்னை யெனின், புத்தகம் படிக்கத் தொடங்குங்காலை தத்தம் உள்ளம் தடுமாற்றம்இல்லாது எடுத்த பொருளின் நுனித்தாய விஷயங்களை அறியவேண்டுவதைப் பற்றியும் இன்னது இன்னது படித்தபின் இன்னது இன்னது படித்தல் வேண்டுமென்னு முறைமையும் ஆம். "நூலாராயுமுறை" என்றசொற்றொடருக்குப் பொருள் விளங்கிக் கிடத்தல் காண்க. நம் மனத்தில் வேறோர் நினைவின்றி ஓர் ஊக்கமாகவேயிருக்குஞ் சமையத்தில் நூல் ஆராய்ச்சிசெய்வோமேயாயின் அவ்வவற்றிற்குள்ள பொருள் மனத்திற்பதிவதோடு வேறோர் வியப்பாகிய பொருள் தோன்றவும் அதனால் நாம் மகிழ்வு அடைகின்றோம். அன்றி மனத்தை உலகவியவகாரத்திற் சிறிது செல்லவிட்டுக் கொண்டு சிறிதை ஆராய்ச்சியிற் செலுத்தி படிக்குங்காலை "இதன்பொருள் அதிக கருகல். ஆக்கியோன் தன் மனம் போனபோக்கே போயினன்." எனக்குறைகூறி நிற்பேமாகின்றேம். இவ்விஷயம் எல்லார்மனத்திலும் வேரூன்றிக்கிடக்கும் அனுபவசித்தாந்தம். இவ்வணங் குறைகூற நியாயம் உண்டாவது எதனால் என நாம் யூகிக்கின், படிக்கத்தொடங்குமுன்னரே மனவமைதிபெறாது கண் ஒன்று நாடவும் செவி ஒன்று கேட்கவும் கருத்தொன்று நினைப்பதுமாகிய விவற்றாற்றான். படித்துக்கொண்டு வரும்பொழுதே ஏதாவது ஓர் காரியத்தில் மனம்பதிந்து

144

இதுமுன் படித்தது இதுபின் படித்தது என்று தெரியாமல் வாயினுற்கலகலவென்று மட்டும் இரைந்து வாசிக்கின்றோம். பின்னர் அயலிலிருந்தவர் ஈண்டு எதுவிட்டு எது படிக்கிறீர் எனவினவின் என்னபாரும் ஞாபகம் எங்கேயோ போய்விட்டது என்று சொல்கின்றோம். தானம் தவம் முதலிய நன்னெறியாற்றுவதெல்லாம் மனத்தூய்மைப்பட்டு ஓர் வழியினின்று முழுமுதற்கடவுளை வழிபட்டு அவனருளையடையவேண்டுமென்பதையெண்ணியல்லாமல் வேறோர் செய்கைக்குமன்று. அதனாற்றான் அவனருள் வழிப்பட்ட பேரறிஞர்களில் தாயுமானசுவாமிகளும் ஏ எங்கு நிறைகின்ற பொருளே! "பாழானவென்மனங்குவியவொரு தந்திரம் பண்ணுவதுனக்கருமையோ" வென வேண்டுகின்றனர். ஆதலால் புத்தகம் படிக்கத்தொடங்குங்காலையே மனத்தை பரிசுத்தப்படுத்திவைத்துக் கொள்ளல்வேண்டுமென்பதாயிற்று. ஓர் எட்டுணையும் உள்ளம் அசையின் வாய் விட்டுப்படிக்கும் அமையம் ஆவி வெளிவந்து வாய்மூடி மூடித்திறந்து வாய்மெல்லல் மாத்திரையன்றி ஒரு சிறிதும் பயனிலதாமென்க. மேற்றிசையோரிடம் ஒரு அரிய நல்ல பழக்கம் உண்டாகி வளர்கின்றது. அஃதென்னவென ஆராயின் தமது தமது உத்தியோக வேலை முதலியவை முடிந்ததும் புத்தியைச் சலனப்படுத்தாமல் வேறொருவரிடமும் வீண்வார்த்தை கதறாமல் தனியாக ஓர் இடத்தில் இருந்து கொண்டு புத்திக்கு வேலைகொடுக்காது அசையாதிருப்பார்கள். அல்லாமல் எதாவது பொழுது போகுமட்டும் வியவகாரஞ் செய்யின் பிறகு தமது வேலையின் அறிவு மழுங்கி நழுவுதல் அடையுமென்பதே அவர்களின் முடிபான கருத்து. நம்மவர்கள் சிறு போதாவது ஓரிடத்திற் றனித்திருக்கமாட்டார்கள். பேசுவதற்குத்துணை அயலில் இருந்து கொண்டேயிருத்தல் வேண்டும். இல்லாவிடின் பக்கத்து வீட்டுகளுக்காவது எழுந்து ஓடுவர். அல்லது ஒருவரோடு எப்போதும்பேசிக்கொண்டேயிருக்கப் பிரியப்படுவார்கள். அல்லது பேசுபவர்கள் வாய்பார்த்தலிலேயே பிரியப்படுவார்கள். இப்பயனிலமொழிகள் முதலியவற்றால் சிறிது சொல்விழுக்கு வந்தடையுமென்பது பெருந்துணிபென்க. ஒருவர் 10 வார்த்தை முறையாகவே பேசிவரினும் ஒருவார்த்தை பொருந்தாத தாகியும் தவறுடைத்தாகியும் வந்துசேருவதியல்பு. இதனால் அயலிலுள்ளவர்கள் தம்மேற்சினக்கத் தாம் அன்னார்க்கு ஓர் பகைவராகக் காணப்படுவர். அதனினின்றும் ஒருவர்க்கொருவர் மித்திரபேத முதலிய தீச்செயல் விளைப்ப முயல்வார்கள். ஆகலின், எப்போதும் பயனிலவாகிய சொற்களே, காரணமில்லாத கொடுமையை முன் கூட்டிக்கொடுக்குமென்க.

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

என்ற, அருமை வாக்கு இவற்றிற்கு ஓர் சாக்ஷியமாக அமைந்திருப்பதும் கற்றுவல்ல நம்பெரியார் அறியாததொன்றன்று. இதனால் மனத்திற்கு ஓர் ஓய்வு கொடுத்துக்கொண்டிருக்கவேண்டுமென்பது பேரறிவாளரின் தெள்ளியகருத்தாகும்.

படித்தரமாகவே ஒருவர் படிக்கின் புலமை நிரம்புதலடைந்து நுணுகிய அரியபொருள்களையெல்லாம் நிமிடத்திற் கண்டுபிடிக்கும் வல்லமையுடையவராய் முன்னோர் கருத்துக்குமுரணாது அவர் மொழியையும் பொன்னே போற் போற்றி வளர்க்கும் பெரிய பண்டிதராகுவரென்க. இம்முறை முன்னர் உள்ள புண்ணிய சீலர்களெல்லாம் கைக்கொண்டு எந்நெறியும் வழாது அறிவு விசாலித்து இனிமை புதுமை மிளிர சிங்காரமான அரிய பெரிய நூல்களியற்றிப் போயினார்கள். தற்கால நிலைமையினை இறகுபற்றியெழுதப்புகின் வயிறெரிகின்றது. பிள்ளையார் குட்டு குட்டிக்கொள்ளும்போதே கண்ணிற் குட்டிக் கொள்வது போல இக்காலத்திற் படிக்க ஆரம்பிக்கும் நம்மவர்கள் படிக்கு முறைமை இவ்வாறு என முன்னர் அறியாது எடுத்தவுடன் குறளில் 4 அதிகாரமும் நாலடியில் 4 பாட்டும் விநோதரசமஞ்சரியில் கல்விமான்கள் புதுமை தோன்றச் செய்தருளிய பாடற்றொகைகளில் 20 விருத்தமும் இவையனைய பிறவும்சிலவற்றைப்பாராயணஞ்செய்துகொண்டு உள்ளதை இல்லதெனவும் இல்லதையுள்ளதெனவும் நிலைபேறுடையதை நிலைபேறில்லாததெனவும் நிலைபேறில்லாததை, நிலைபேறுடையதெனவும் குளறி எல்லாம் தமது உணர்வுக்குள் அடங்கினதென மனம் புண்படவெண்ணி தாம் சுயமாக கவி முதலிய இயற்றக்கருதி அங்ஙனியற்றி வெளிவந்ததும் கற்றுவல்ல பண்டிதர்களால் இகழப்பட்டு ஓட வெற்றிடம் பார்ப்பார்கள். அம்ம! இங்ஙனிகழ வந்ததும் முறையிற்கல்வி பயிலாததினாலன்றோ! இவ்வளவு லக்ஷணத்தில் வருகிறவர்களிடமெல்லாம் "எமக்கோர் சந்தேகம் தோன்றுகின்றதுதோன்றுகின்றது" என எங்கேயாவது ஓர் மூலையிற் கிடக்கும் அரியசெய்யுளொன்றைச் சொல்லி "இதன்பொருளென்ன"வெனவாதாடி வழக்குக்கு நிற்பர்கள். அச்செய்யுளுக்கு முன்னேயாவது பின்னேயாவது தங்களுக்கு வரும் செய்யுளைச்சொல்லி அதற்கமைந்துகிடக்கும் பொருள் இன்னதெனச் சொல்லுமென ஒருவர் கேட்டுவிடினன்றோ இத்திருட்டுக்கவிப்புலவர் சந்தேகம் விளங்கிவிடும். இக்களவுப் படிப்பினர்கட்கு ஓர் செய்யுளெடுத்து பொருள் கூறப்புகுவது குரங்குகையில் பூமாலை கொடுத்தது போலவேயாகும். குரங்கின்கையினின்று பூமாலை பிட்கப்படுவது முதலிலிருந்தென்றும் அடியிலிருந்தென்றும் ஓர்வரையறையில்லை. அதன் தோற்றம் எப்படியோ அப்படியே பூமாலை முடிவுபெறுமென்க. இவ்வாறே முறையிலராய்ச்சியுடையார் அருத்தம் செய்தாலும் செய்தார். அனர்த்தம்

செய்தாலும் செய்தார். இதில் இடையிடையே நாக்கமழ கற்பனை பொருத்தமின்றென்றென்று சொல்லிக்கொள்ளுவர். இதற்கு நுகத்தடிக்கையொப்பக்காரர்களே போதிய மேம்பாடுடையவர்களெனக் காணப்படுகின்றனர். இவர்களைக் கற்றறிமோழை யென்று சொல்வதுமாகாது. அங்ஙன்கற்றுவது அறிந்தாரில்லை. நம் தமிழ்நாடு கற்கு முறைகற்காது நிலைகுலைந்து போனதெனக் கருணைபூத்து ஒவ்வோர் புத்தகங்களையும் பரிசீலனஞ் செய்து இன்ன நூல்கற்றபின் இன்ன நூல்கற்கவேண்டுமென்று நம் முன்னோர் எல்லாருமறிய எழுதிவைத்துக் காலஞ் சென்றனர். அவ்வாறெழுதியும் அதனை அங்கீகாரஞ் செய்யாது கொண்டது கருத்தாய் கண்டது கற்கின்றனரே. அவ்வாறு கற்பதனால் விபரீதமான யுக்திகளெல்லாந்தோன்றி அதிகப்பிரசங்கத்துக்கு இடமாய் விடுகின்றதல்லாமலும் அகங்காரம் பிறந்து யாரிடமும் வாது பேச வாய்துடிக்கின்றது. முறையே ஒருவன் படிப்பானாயின் இன்ன இன்ன பாகுபாடு கொண்டெழுந்துளது என நுனித்தாகத் தெரிந்துகொள்ளக்கூடும். அவ்வாறன்றி எடுத்ததும் கம்பராமாயணப் பிரசங்கியாகவரவேண்டுமென்றால் அதன் சொற்சுவை பொருட்சுவை கற்பனை அதிசயம் விளங்காதனவாகி ஒருசிறிதேனும் பயன்படாதனவாய் முடிந்துவிடும். இடம் அறிந்து உய்த்துணரவைத்தல் எவ்வகைக் கல்விக்கும் ஆவசியகமென்க. நம்மவர்களிற் சிலருக்கு ஏதோ சிறு நல்லறிவு தோன்றியதும் கைவல்லியம் முதலாகிய முடிபுநூல்களைச் சிறிது சிறிது கற்றுக்கொண்டு அதுதப்பு இதுதவறு எனப் பிதற்றத்தலைப்பட்டுத்தாம்செய்வதெல்லாம் தீமையாகவிருக்க உள்ளக்கோவிலிற் சென்றல்லவா தரிசிக்கவேண்டுமென்று வாய்ஞானமட்டும் பேசி தம் தம் மனைக்கிழத்தியையும் விட்டு பணம் பணமெனக்கையேந்தி வருகின்றனர். அதையும் நாம் கண்ணாரக் கண்டுவருகின்றோம். இங்ஙனமுறை கெடுவதைப்பார்த்தன்றோ செந்தமிழ்ச்சங்கம் ஆதீனம் முதலிய இடங்களில் சிறு படிப்பாளர்கட்கு பெரிய நூலை ஆதியிற்றவக்காது சிறிய அரிய நூல்களை முன்னர் பாடங்களைக் கொடுக்கின்றார். அவற்றையும இன்றியமையாத காரியமென நாம் எண்ணல் வேண்டும்.

(இன்னும் வரும்)

சே. பெ. கொ. இராமசாமி வன்னியன்.
அரிச்சியபுரம்.

அன்னையும் பிதாவும்.

---:o:---

"அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்." அதாவது, முதலில் தெரிந்துகொண்ட தெய்வம், அன்னையும் பிதாவுமே. இங்கே, 'முதலில் தெரிந்துகொண்ட தெய்வம்' என்றதனால் அடுத்துத்தெரிந்து கொள்ளவேண்டிய தெய்வமும் ஒன்று உண்டென்பது உறுதியாயிற்று.

இன்னமும், அறி என்னும் முதனிலை பிறவினை வாய்பாடா நின்று "அறிவித்த" என விரிந்து, சிறிதும் அறிவில்லாத ஒரு கட்டையைப்போலக்கிடந்த நமக்கு முன்னின்று இது மடம், இது குடம், இது படம் என ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டி படிப்படியா அறிவூட்டி நம்மையறிவுடையோரென வைத்தலால் பெற்றோர் தெய்வமென்னப்பட்டனரென்றுங் கொள்ளலாம். இதுவும் பெற்றோர் முன்னின்றறிவித்த தெய்வமென்னப்படுதலால் உண்ணின்றறிவிக்குங் கரந்துறைதெய்வமு மொன்றுண்டென்பதுணர்த்திற்று.

ஒருமையில் தெய்வமென்றது, ஒரே தெய்வவுண்மையைக் குறிப்பிட்டதாம். ஈண்டுப் பெற்றோரைத் தெய்வமென்றது உபசாரம். ஆதலால் தெய்வமென்றதை ஒருமைப் பன்மையாகக்கொண்டு, தெய்வங்கள், என்று கொள்வதும் பொருத்த முடைத்தே. உண்மையில் பெற்றோர் அருட்டன்மையி லொருமையும் பொருட்டன்மையி லிருமையும் பெற்றிருத்தலால், இருதிறத்தும் பொருள் கொள்ளும்படிதான் எமது ஔவை பிராட்டியார் இங்கே தெய்வமென்று வைத்தனர் போலும்.

அம்மையும், அப்பனும், இரண்டு சரீரிகளாயிருந்தாலும், அவ்விருவரும் வேறுபாடின்றிச் சரீரமும் மனமும் ஒன்றுப்பட்டிருந்த அவசரத்தில் தான்மக்களுதிப்பர். மேலும் பெற்றோர்களின் மனம் பிள்ளைகளின் நன்மை ஒன்றனையேநாடி நிற்கும். அல்லாமலும், பிள்ளைகளுக்குத் துன்பம் நேரிட்டால், தாய்தகப்பனிருவருடைய கண்களினின்றும் ஒன்றுபோலக் கண்ணீருண்டாவதைக் காணலாம். அன்றியும் பிள்ளைகள் பெற்றோர்களைக் கழுத்தைக்கட்டி விளையாடும் போதும், அவர்களுண்ணுங் கலத்திற் கைபோட்டு,

148

"இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்" என்றபடி,

கூடப்பிசைந்தும், தோண்டியும், வாயாற் கவ்வியும், கையாற் றுழாவியும், நெய்யுடையுணவை உடம்பின்கண் படச் சிதறுதல் கண்டு உண்ணும் காலத்தும், பிள்ளைகள் விளையாடுவதைக் காணும் சமயத்தும், அவர்கள் பிள்ளைகளை முத்தாடி உச்சிமுகரும் வேளையும், பிள்ளைகள் பேசும் நேரத்தும், அம்மையப்ப னிருவருடைய ஐம்பொறிகட்கும் ஒரே படித்தாக இன்ப முண்டாகின்ற துண்மை. இவ்வுண்மை பற்றியே,

"மக்கண்மெய் தீண்ட லுடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு"

"அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்"

"குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்" என்றார் நாயனாரும்.

ஆனபடியா லருட்டன்மையிற் பெற்றோர் ஒருமையினரேயா யிருக்கின்றனர்.

இவர்கள் வேறு வேறு சரீரிகளா யிருத்தலினாலும் "தாயோ டறுசுவைபோம்—தந்தையொடு கல்விபோம்" என்றபடி, தாயாலாகும் காரியங்கள், (பத்து மாதஞ் சுமந்து, வருந்திப்பெற்று, முலையூட்டி, பத்தியங்காத்து வளர்த்தல் முதலியன) தகப்பனாலாகாமையும், தகப்பனாலாகிற காரியங்கள் (கல்வி யறிவு ஒழுக்கங்களின் அபிவிர்த்திகள்) தாயினாற் செய்யக்கூடாமலிருக்கிறதோர் உண்மையாலும், ஒருவரைவிட்டொருவர் முன்னும் பின்னுமாகப் பிரிந்து போகிறதினாலும், பொருட்டன்மையி லிருமையினராகவே யிருக்கின்றார்கள்.

(இன்னும் வரும்)

த. ஆறுமுகநயினார்பிள்ளை.